19th July 1957]

SRI T. S. RAMASWAMY PILLAI : இப்போது தானமாகக் கொடுக்கப் பட்டிருக்கிற எல்லா கிராமங்களிலும் சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்குப் போதுமான விஸ்தீர்ணம் உள்ள நிலங்கள் இருக்கின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : சில இருக்கலாம், சில இல்லாமல் இருக்கலாம். அதைப்பற்றிப் பரிசீலனை செய்து அதற்கு ஒரு திட்டம் ஏற்பாடு செய்வோம்.

SRI A. VEDARATHNAM PILLAI : கிராம தானமாகக் கொடுக்கப்பட்டுள்ள கிராமங்களிலேயே இப்போது ஒரு சிலர் கொடுப்பதற்கு மறுத்தாலும், முன்பு கொடுத்துவிட்டு இப்போது பின் வாங்கிவிட்டாலும் அவர்களுடைய விஷயம் எப்படி கவனிக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அவர்களை விட்டுவிட்டு பாக்கி இருக்கக்கூடியவர்களை வைத்துக் கொண்டு இந்தத் திட்டம் நிறைவேற்றப் படும்.

SRI A. GOVINDASAMY : இதுவரைக்கும் கூட்டுறவு இயக்க முறையில் சாகுபடி அமுல் நடத்தப்படுகிற கிராமங்கள் எவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இன்னும் ஆரம்பிக்கவில்லை. அதற்காகத்தான் இப்போது ஒரு கமிட்டியை ஏற்பாடு செய்தோம். அந்தக் கமிட்டியின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டவுடன், பிற்பாடு அதன்பேரில் எல்லா விஷயங்களும் யோசிக்கப்படும்.

SRI M. RAMACHANDRA REDDIYAR : கிராம தானங்களாக வழங்கப்பட்டிருக்கும் நிலங்களுக்கு அரசாங்கம் தீர்வை வஜாசெய்து கொடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் தீர்வை விஷயம் எழுவது கிடையாது. தீர்வை எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கும். இருக்கக்கூடிய எல்லா நிலங்களையும் சேர்த்து விவசாயம் செய்வது என்பது தான் பிரச்னை.

SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister describe the process and methods of taking gramdhan? May I know whether the necessary title deeds are taken from the donors at present?

THE HON. SRI C. SUBRAMANIAM : The owners of all the lands give it in writing to Vinobhaji saying that they are willing to surrender all their lands in that village. Now the matter is under consideration how it could be legalized. The idea is that co-operative societies should be formed consisting of all the villagers and their title deeds.

Licence for a Cement Factory in Ramanathapuram district.

S.N. Q.—SRI R. KRISHNASAMI NAIDU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether a licence has been granted to "Madras Cements, Limited," to set up a cement factory in Ramanathapuram district;

(*b*) whether the Madras Cements, Limited, applied to the Government in January 1957, for the mining lease for mining the limestone, the chief raw material required for the industry in Ramanathapuram district; and

[19th July 1957

(c) if so, the action taken by the Government on the above application?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) Yes, Sir.

(c) The matter is under consideration of the Government in consultation with the Government of India.

SRI R. KRISHNASWAMI NAIDU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கம்பெனிக்கு பிப்ரவரி மாதத்திலேயே பாக்டரி அமைக்க லைசென்சு வழங்கப்பட்டிருக்கிறது. மைனிங் லைசென்சு வழங்கப்படுவதில் ஏற்பட்ட கஷ்டம் என்ன? ஆறுமாதத்திற்குள் பூர்வாங்க வேலைகள் தொடங்கவேண்டும் என்றும் 18 மாதங்களுக்குள் கனரக இயந்திரங்களுக்கு ஆர்டர் கொடுக்க வேண்டுமென்றும் லைசென்ஸ் கொடுக்கும்பொழுது சில வரையறைகள் குறிக்கப்பட்டது. முக்கியமாக இப்போது மைனிங் லைசென்சு வழங்குவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இந்தச் சுரங்கக் குத்தகை விஷயமாக மெட்ராஸ் சிமெண்டு கம்பெனிக்கும், இந்தியா சிமெண்டு கம்பெனிக்கும் ஒரளவு மனத்தாங்கல் இருக்கிறது. இந்தியா சிமெண்டுக் கம்பெனியார் அந்தக் குத்தகையை தங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். மெட்ராஸ் கம்பெனியாரும் தங்களுக்கே கொடுக்க வேண்டுமென்று கேட்பதால் யாருக்குக் கொடுப்பது என்பது பிரச்னையில் இருக்கிறது. அதுதான் தாமதம்.

SRI S. B. ADITYAN : இந்த மெட்ராஸ் கம்பெனியார் சிமெண்டு தொழில் சாலையை ஆரம்பிப்பதற்கு சர்க்காரே 10 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கோரியிருப்பதாகத் தெரிகிறது. அப்படிக் கொடுக்கும் போது இதனால் ஏற்படும் விளைவு என்ன என்பதை யோசித்துப் பார்த்து ஏற்கனவே சுதர்சனம் ஆயில் மில்லுக்குக் கொடுத்தபோது ஏற்பட்ட நிலைமை ஏற்படாது இருக்கவேண்டும் என்பதை மனதில் கொண்டு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI R. VENKATARAMAN: சிமிண்டு தொழிற்சாலையை ராமநாதபுரம் ஜில்லாவில் ஆரம்பிக்கவேண்டுமென்ற காரணத்திற்காக மெட்ராஸ் சிமெண்டுக் கம்பெனியார் சென்னை சர்க்கார் பத்து லட்சத்திற்கு அதிகமாக இல்லாமல் அதில் ஓரளவு பங்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டிருக்கிறார்கள். சர்க்கார் தொழில் துறையில் ஈடுபடவேண்டும் என்ற கொள்கையை ஒப்புக்கொண்டுவிட்டால் அதில் லாப நஷ்டம் வந்தாலும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டி நேரிடும்.

SRI R. KRISHNASWAMI NAIDU: அந்த மைனிங் லீஸ் கொடுக்கும் அதிகாரம் பூர்ணமாக மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறதா? அல்லது மாகாண சர்க்காரிடமே இருக்கிறதா? ஆனால் இந்த மைனிங் லீஸ் வேண்டுமென்று கேட்பதற்கு முதலில் அந்தத் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு மத்திய சர்க்காரின் லைசென்சு பெற்றவர்களாக இருக்கவேண்டுமென்பதாக முதல் தகுதி குறிக்கப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : மைன்ஸ் லீஸ் விதிகள் பிரகாரம் இரண்டு பேர்கள் ஒரு இடத்திலே குத்தகை வேண்டுமென்று கேட்டால் முதலில் யார் கேட்டார்களோ அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும். ஆனால் தகுந்த காரணத்திற்காக மாகாண சர்க்கார் வேறு யாருக்காவது கொடுக்கலாம் என்று அதிகாரம் இருக்கிறது. அந்த முறையில் மெட்ராஸ் சிமெண்டு கம்பெனியாருக்குக் கொடுக்கவேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறது.